## சிறப்பு சார்பு நீதிமன்றம் (LAOP) எண்.2 , ஜெயங்கொண்டம்

| | | | |
|---|---|---|---|
| வழக்கு | : OS.249/2020 | கிராமம் | ஸ்ரீராமன் |
| சாட்சி | : பி.வா.சா – 1 | வட்டம் | : ஆண்டிமடம் |
| பெயர் | : ஆனந்த்பாபு | வயது | : 39 |
| த/பெ | : தங்கவேல் | தொழில் | : Engineer |

2025–ம் ஆண்டு ஆகஸ்ட் 25–ஆம் நாள் (1969–ம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.தனஞ்செயன், கிரேடு–II பெஞ்ச் கிளர்க் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் 4ம் பிரதிவாதி. பி.வா.சா.1 ஆக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை என்னுடைய முதல் விசாரணையாக ஏற்க வேண்டுகிறேன். இந்த பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது. அதில் சொல்லப்பட்ட விவரங்களை நான் படித்துப்பார்த்து சரி என்று என்னால் ஒப்புக்கொள்ளப்பட்டு நான் என்னுடைய கையொப்பங்களை இட்டேன்.

1. 24.02.2020 தேதியிட்ட போக்கிய இரத்து பத்திரம் பி.வா.சா.ஆ.1.
2. 29.02.2020 தேதியிட்ட என்னுடைய ICICI வங்கி கணக்கின Statement of Account பி.வா.சா.ஆ.2.
3. பிரதிவாதிகள் பெயரில் உள்ள கணினி பட்டா (எண்ணிக்கை 2) பி.வா.சா.ஆ 3.
4. 17.10.2019 தேதியிட்ட என்னுடைய தந்தை தங்கவேலின் இறப்பு சான்றிதழ் பி.வா.சா.ஆ.4.

**மேலும் ஆவணம் குறியீடு செய்ய வேண்டி வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் வைத்து சாட்சி சொன்னவை என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

/ ஒப்பம் / V. பிரேம்குமார்,
சிறப்பு நீதிபதி எண்.2 (FAC),
ஜெயங்கொண்டம்.